# தமிழ் வளமேம்பாட்டில் பேரா. டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் தமிழ்ப் பணி

**பேரா. முனைவர் உலகநாயகி பழனி**

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' எனத் தமிழகத்தின் எல்லைத் தொன்மையும், 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி' எனத் தமிழினத்தின் பழமையும், 'நின் சீர்இளமை திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே' என மொழியின் வளமையும் கொண்ட மொழி தமிழ்மொழி என்றால் அது மிகையில்லை. தனிநாயக அடிகளாரால் 'தமிழ் தெய்வத்தின் மொழி' என்று போற்றப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தமிழ் தெய்வத்தின் மொழி என்றே அனைவரும் ஒத்துக்கொண்டுள்ளனர். இந்த வரிசையில் தெய்வத் தமிழைப் பல்லாண்டுகள் ஆய்வு செய்த பெருந்தகை பேரா. டாக்டர் ந. சுப்புரெட்டியார் என்றால் எள்ளளவும் ஐயமில்லை. அதனால்தான் கலைஞர் பெருமகனார் சுப்புரெட்டியாரின் மறைவுக்குப் பிறகு அவர் படைப்புக்களை நாட்டுடைமையாக்கிப் பெருமைசேர்த்தார். இவ் அரிய படைப்பாளரின் தமிழ்ப் பணியைப் பேராசிரியர் திருமதி டாக்டர் உலகநாயகி பழனி அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்த நாட்களிலிருந்தே நான் நன்கு அறிவேன். இந்த ஆய்வின் வழிகாட்டியாகப் பேராசிரியர் டாக்டர் ந. கடிகாசலம் அவர்கள் இருந்து நெறிப்படுத்தி, இந்த ஆய்வுப் பணியைச் செம்மைப்படுத்தியதையும் நான் நன்கு அறிவேன்.

## இயல் ஒன்று

இதில் பேரா. சுப்புரெட்டியாரின் அனைத்து நூல்களும் முன்னுரையோடு விளக்கப்படுகின்றன.

## இயல் இரண்டு

கல்வியியல் நூல்கள், தமிழியல் நூல்கள், அறிவியல் நூல்கள்,மொழிபெயர்ப்பு நூல்கள்,தத்துவ நூல்கள்,பக்தி நூல்கள்,வரலாற்று நூல்கள்,தன்வரலாற்று நூல்கள்,

தமிழ்ச் சான்றோர் வரலாற்று நூல்கள் என நூற் பிரிவுகள் பேசப்படுகின்றன.

**இயல் மூன்று**

இந்த இயலில் கல்வியியல் நூல்களும் அறிவியல் நூல்களும் ஒப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்படுகின்றன. கல்வி பயிற்று முறை, தமிழ்ப் பயிற்று முறை, அறிவியல் பயிற்று முறை ஆகிய முறைகள் ஆய்வியல் நெறிமுறையோடு விளக்கப்படுகின்றன.

**இயல் நான்கு**

இவ்வியலில் பக்தி நூல்களும் தத்துவநூல்களும் ஆராயப்படுகின்றன. பேரா. சுப்புரெட்டியாரின் படைப்புகளில் இந்த இயல் முக்கியப் பணி வகிக்கிறது. சைவசமய விளக்கு, வைணவ சித்தாந்தம், நம்மாழ்வாரின் தத்துவமொழிகள், ஆழ்வாரிகளின் ஆராவமுது ஆகிய கருத்துக்கள் திறனாய்வு நோக்கோடு ஆராயப்படுகின்றன. ஒப்பாய்வு நோக்கில் சைவமதத்தை 'அன்பே சிவம்' என்றும் வைணவ மதத்தை 'அடைக்கலத் தத்துவம்' என்றும் பேராசிரியர் விளக்குவதை துவைதம், அத்வைதம் ஆகிய தத்துவ முறைகளோடு ஒப்பிடப்படுகிறது. வடமொழியில் சொல்லப்படுகிற 'பிராரத்த கருமம்' (பல வினை) ஆழ்வார் பாடல்களோடு ஒப்பிடப்படுகிறது. இவ்வியலில் பதி,பசு, பாசம் என்ற சைவசமயத்தின் தத்துவார்த்த விளக்கங்களுக்கு ஆணவ மலம், கன்மமலம் ஆகியவை ஒப்பிடப்படுகின்றன. இத்தகைய ஆராய்ச்சியில் வல்லவராக விளங்குகிற பேரா. நா. சுப்புரெட்டியார், சைவசமயம் குறித்தும் 28 நூல்கள் படைத்துள்ளார். கால முறைப்படி இவ்வியலில் இந்த நூல்கள் ஆராயப்படுகின்றன.

**இயல் ஐந்து**

'அறிவியல் பார்வையில் பேரா. நா. சுப்புரெட்டியார்' என்ற இந்த இயல் முத்தமிழாக இருந்த தமிழ் அறிவியல் தமிழாக வளர்ந்ததை இவ்வியல் எடுத்து இயம்புகிறது. சுப்புரெட்டியார் எழுதிய காலத்தில் அறிவியல் பார்வையோடு ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் பார்க்கும் திறன் இவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற கருத்து பல ஒப்பீடுகளோடு ஆராயப்படுகிறது. அறிவியல்

உலகத்திற்கும் தமிழ் உலகத்திற்கும் சுப்புரெட்டியார் தந்த கொடை ‘வாழையடி வாழை’ என்ற பரம்பரை பற்றிய (Genetics) ஆய்வு நூல் செறிவாக விளக்கப்படுகிறது.

**இயல் ஆறு**

இவ்வியலில் கற்பித்தல் முறை பற்றியும் கற்றல் முறை பற்றியும் விளக்க வந்த சுப்புரெட்டியார் அவர்கள் மூன்று அழகான நூல்களைத் தருகிறார் இந்த நூல்கள் இவ்வியலில் விளக்கமாகப் பேசப்படுகின்றன.

1. அறிவியல் பயிற்று முறை, தமிழ்ப் பயிற்று முறை, கவிதைப் பயிற்று முறை ஆகிய முறைகள் விளக்கமாக இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

**இயல் ஏழு**

சமயம், தத்துவம், சுயசரிதை திறனாய்வு இலக்கியங்கள் ஆகியவை ‘சுப்புரெட்டியாரின் படைப்புலகம்’ என்ற பொருண்மையில் இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

**இயல் எட்டு: முடிவுரை**

ஆய்வாளர் உலகநாயகி பழனி அவர்களின் கடும் உழைப்பினால் சுப்புரெட்டியார் படைப்புலகம் ஆய்வு உலகத்திற்குக் கொண்டுவரப்பட்ட அவசியம் குறித்து முடிவுரை விளக்குகிறது. பின்னிணைப்பாக துணை நூல் பட்டியல், முதன்மை நூல்கள், துணை நூல்கள் , பேரா. சுப்புரெட்டியாரின் பேட்டி, 1950 லிருந்து 90 வரை 40 ஆண்டு காலம் வெளிவந்த பேராசிரியர் நூல்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருண்மை பட்டியலிடப்படுகிறது.